# பொங்கல்

தி. உதயசூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல்



தி.உதயசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பொங்கல் |
| ஆசிரியர் | : | தி.உதயசூரியன் |
| முதற்பதிப்பு | : | 2008 ஐப்பசி |
| அச்சுப்பதிப்பு | : | மல்ரிவிஷன்அச்சகம் வவுனியா. 024 2223669 |
| விலை | : | 30/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, செட்டிக்குளம் மகாவித்தியாலய அதிபர்,
திரு.எஸ்.ஜேசுதாசன் அவர்கள் வழங்கிய,

# வாழ்த்துரை.

எமது பாடசாலை ஆசிரியர் திரு.தி.உதயசூரியன் அவர்கள் படைப்பாக்கம் செய்து வெளியிடும் பொங்கல் என்ற இச்சிறு நூலுக்கு அன்புரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நூல் சிறிதே ஆயினும் இதன் கனதி பெரியது.

இந்த நூல் இரண்டு கவிதைகள், ஒரு கதை என்பவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தன்னுயிர்போல் பிறவுயிர்களை நேசிக்கும் பண்பை அவை வலியுறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் சிலவற்றின் மீது வினாக்களைத் தொடுக்கும் அதேவேளை பிற உயிர்கள் மீதான அன்பை வலியுறுத்துகின்றன.

நமது அகச்சூழல் பற்றியதும் புறச்சூழல் பற்றியதுமான சில அனுபவப் பதிவுகளை நம்முடன் பகிர்ந்து கொள்வதனூடாக நமது கல்வி முறைமை பற்றிய சில வினாக்களையும் நம்முள் எழச் செய்கின்றன.

நமது சமகாலக் கல்வி முறைமையினுள் பிள்ளைகளின் ஆளுமை விருத்தி நல்மனப்பாங்கு விருத்தி என்பவற்றை உருவாக்குவதில் பெற்றார்களே செயலூக்கமான நடிபங்கினை வழங்க வேண்டும் என்பது அம்மா மகள் பெரியம்மா ஆகிய பாத்திரங்களினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

படிப்பவர்கள் மிக எளிதில் புரிந்து கொள்ளும் படியான மிக இலகுவான மொழிநடையில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது மாணவர்கள் படித்து இன்புறுவதுடன் நல் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ள இந்நூல் கருவியாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

ஆசிரியர் தி.உதயசூரியன் இது போன்று மேலும் பல நல்ல படைப்புக்களைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அவரின் படைப்பாக்க முயற்சிகள் வெற்றிபெற எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க நலம்.

வ/செட்டிக்குளம் மகாவித்தியாலயம்
வவுனியா தெற்குவலயம்.

எஸ்.ஜேசுதாசன்
அதிபர்

18.9.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதம்

அம்மா காலை
வீடு மெழுகென்று
சொன்னா.

கூட்டிப் பெருக்கி
சாணி பிசைந்து பிசைந்து
மெழுகுகிறேன்.

இன்று வெள்ளிக் கிழமை
அம்மா விரதம்.

என் பிஞ்சுக்கரம்
வலிக்க வலிக்க
பிறைபோல்
நிலம் வளித்து வளித்து
வீடு மெழுகுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமான வீட்டில்
மகாலட்சுமி குடியிருப்பாள்
என்று அம்மா சொன்னவ.

மகாலட்சுமியை வரவேற்க
வாசலில் கோலமும்
போட விரும்பி,
விரைவாய்
மெழுகுகிறேன் வீடு.

கோலம் போடும் மாவைப்
பிறவுயிர்கள் சாப்பிட்டால்
புண்ணியம் கிடைக்குமென்று
ரீச்சர் சொன்னவ.

அள்ளிவந்த சாணம்
சற்றே காய்ந்திருந்ததால்
தண்ணீர் விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசக்கிக் கசக்கி
நிலத்தோடு
தேய்த்துத் தேய்த்து
மெழுகுகிறேன்.

"அந்தோ,"

முருகன் படத்திற்கு
முன்னால்
என் கண்ணெதிரே
ஓர் வண்டு
நசிபட்டுப் கிடக்கிறது.

சிற்றறிவுள்ள சீவன்
சீவியத்திற்காய்
சாணிக்குள் புகுந்ததோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலம் போடும்
நினைவில்
கொலைகாரி ஆனேனோ?

இது மெய்தானோ?

என் பிஞ்சுக்கரம்
வலிக்குதென்று
சொன்னேனே,
அதுவும் மெய்தானோ?

கோலம் போடும் மாவும்
விரதம் பிடிக்கும் அம்மா,
படைக்கும் உணவும்
யாருக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல்

"பெரியம்மா.... பெரியம்மா......"

"வாடா செல்லம்...."

பெரியம்மாவின் அழைப்பு இதமாக இருந்தது.

வான் நோக்கி வளர்ந்திருக்கும் தென்னை மரங்களை ஊடறுத்து பெரியம்மாவின் வீட்டு வாசல்வரை செல்லும் பாதையின் இருமருங்கிலும் பல்வகை மலர்களும் பல்வகை நிறங்களில் பூத்துக்குலுங்கும் காட்சி மலர் கொய்வென உபவனத்துள் நுழைந்தது மாதிரியான உணர்வை என்னுள் ஏற்படுத்தியது.

சிவப்பு,மஞ்சள், ஊதா, வெள்ளை நிறங்களிலான செவ்வரத்தம் பூக்களுடன், போட்டியாக றோசாப் பூக்களும் பல்வேறு நிறங்களில் பூத்து மணம் பரப்பிக் கொண்டிருந்தன.

அந்த சுகந்த வாசனையில் மூழ்கியவாறே எங்கள் உள்ளக் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் தெய்வம் பெரியம்மாவின் இல்லக் கோயில் வாசலை நான் நெருங்குவதற்கிடையில் பெரியம்மா வெளியே வந்து விட்டா. தூரத்தில் நிற்கும் போதே பெரு வெளிச்சம் வீசுகின்ற தீபச் சுடர் போல் பெரியம்மாவின் முகம் காட்சி தந்தது.

"சிந்தாதேவி செழுங்கலை நியமத்து
நந்தாவிளக்கே நாமிசைப் பாவாய்"

என்ற பாடல் வாரிகளை என் உதடுகள் உச்சரித்தன.

"என்ன பிள்ளை அம்மா ஏதும் சொல்லி விட்டவவோ?"

சரஸ்வதியின் கைவீணை போல் பெரியம்மாவின் குரல் இனிமையாக ஒலித்தது.

உண்மையிலேயே பெரியம்மாவின் நாவில் கலைமகள் குடியிருக்கிறாள் என்பதை பெரியம்மாவுடன் நேரில் பழகியவர்கள் அறிவார்கள்.

எங்கட அம்மா இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் பெரியம்மா சங்கீத பாட ஆசிரியையாக இருந்தவ. பெற்ற தாய் இல்லாத அம்மாவை மியூசிக் ரீச்சர் சொந்த மகள் மாதிரியே பார்த்தவ. இன்றுங்கூட அம்மா ஏதாவது சிக்கல், பிரச்சினை என்றால் பெரியம்மாவிடம் ஆலோசனை கேட்டுத்தான் முடிவெடுப்பா. எங்களுக்கு ஏதாவது காசுக் கஸ்டம் வந்தாலும் பெரியம்மாதான் உதவி செய்யிறவ. பண உதவி மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன ஆறுதலாகவும் இருப்பவ பெரியம்மாதான்.

கொஞ்சநாளைக்கு முந்தி எங்கட அம்மா அழுகிற சத்தம் கேட்டு பெரியம்மா வர அம்மா ஓடிச்சென்று பெரியம்மாவைக் கட்டிப்பிடித்து

"இனி நான் உயிர் வாழ மாட்டன் ரீச்சர்: என்ர தங்கப்பவுணுக்கு கருங்குழவி குத்திப் போட்டுது"
என்று சொல்லிச் சொல்லி அழுதவ.

பெரியம்மா சற்றும் பதற்றம் இல்லாமல் "கொஞ்சம் பொறு. குழவி குத்தின பிள்ளையைப் பார்ப்போம்" என்று கூறியபடியே அம்மாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எனக்குக் கிட்டவர அம்மா நிலத்தில் விழுந்து உருண்டு , உருண்டு புரண்டு, புரண்டு அழுதவ. அம்மா அழுவதைப் பார்க்க எனக்கும் அழுகை வந்தது. அழுதேன்.

"இப்ப என்னத்துக்கு அம்மாவும் பிள்ளையும் ஒப்பாரி வைத்து ஊரை அழைக்கிறியள். இஞ்ச கிட்ட வா பாப்பம்"

என்று என்னை மார்போடு அணைத்து தன்விரல்களால் என் தலைமயிரைக் கோதி குழவி குத்தின இடத்தைக் கண்டுபிடித்த பெரியம்மா தலையில் ஏறியிருந்த கொடுக்கினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமாக நுள்ளி எடுத்துவிட்டு "இனி ஒன்றும் செய்யாது'' என்று சொல்லிக்கொண்டு வாசல் குந்தில் உட்கார்ந்தபடி

"இஞ்சைபார் அன்னம்மா நீ என்னத்துக்காக உந்தச் சுடுபுழுதிக்குள் கிடக்கிறாய். அது பிள்ளைக்கு ஒன்றும் இல்லை. நீ எழும்பி இஞ்ச கிட்ட வா''

என்று எங்கட அம்மாவைக் கூப்பிட அம்மா எழுந்து வந்து பெரியம்மாவுக்கு அருகில் இருந்துகொண்டு விக்கி விக்கி அழத் தொடங்கினா.

"என்ன இது குழந்தைப் பிள்ளை மாதிரி அழுகிறாய்.ஒரு குமர்ப்பிள்ளையையும் வைத்துக் கொண்டு" என்று சொலிலியவாறே அம்மாவின் கன்னங்களிலும் தலைமயிரிலும், சட்டையிலும் படிந்திருந்த புழுதியைத் துடைத்துவிட்டா பெரியம்மா.

"நான் உங்கட மடியில படுக்கப் போறன்''என்று சொல்லிக் கொண்டு பெரியம்மாவின் மடியில் முகம் புதைத்தா அம்மா.

"செல்லம்....."

என்று என்னை விளித்த பெரியம்மா "அம்மா அழுது, அழுது களைத்துப் போனா. அடுப்பை மூட்டி சுடுதண்ணி வையடா குஞ்சு'' என்று என்னிடம் கூறினா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி என்று நான் குசினிக்குள் போய் அடுப்பை மூட்ட ஆயத்தம் செய்தபோது

"கவனம், நெருப்புப்பெட்டி தட்டுறது"

என்று பெரியம்மாவின் மடியுக்குள் படுத்திருந்தபடியே அம்மா சொன்னா. அம்மா என்மீது எவ்வளவு கவனம். எனக்கு ஏதாவது ஒன்றென்றால் அம்மா தாங்கிக் கொள்ளவே மாட்டா. எனக்கு எறும்பு கடித்தால் அம்மாவுக்குப் பாம்பு கடித்தமாதிரித் துடிப்பா. "அன்னத்துக்குத் தன்குஞ்சு தங்கப் பவுண்தானே" என்று பெரியம்மா சொன்னவ. அம்மா கல்லூரியில் படிக்கிற காலத்தில் அம்மாவின் நடை உடை பாவனை எல்லாவற்றையும் கூர்ந்து அவதானித்தபின் கண்ணம்மா என்ற அம்மாவின் பெயரை அன்னம்மா என்று சொல்லுறவ பெரியம்மா. விடயங்களைத் தெரிவு செய்வதில் அம்மா அன்னப்பட்சி மாதிரி என்பதை நான் நாளாந்தம் அவதானித்து வருகின்றேன்.

நான் தேநீர் போட்டுக்கொண்டு வந்ததும் "அன்னம் எழும்படா என்ர குஞ்சு" என்று தன் மடியுக்குள் கண்ணயர்ந்திருந்த அம்மாவை எழுப்பி தேநீர் குடிக்கச் செய்தா பெரியம்மா. பின்னர் நாங்கள் மூவரும் கிணற்றடியில் கால், முகம் கழுவிவிட்டு வந்து சுவாமி அறைக்குள் இருந்து காயத்திரி மந்திரம் ஓதினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் பூர்புவர்ஸ்வக
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கே தேவஸ்ய தீமகி
தியோ யோநப் பிரசோதயாத்"

என்று அம்மாவும், பெரியம்மாவும் ஒவ்வொரு தரமும் சொல்லச் சொல்ல நான் ஒவ்வொரு பூவாக 108 பூ போட்டேன்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

என்று கூறி நிறைவு செய்த பின்,

"அது பிள்ளைக்கு ஒன்றும் செய்யாது என்றுமீண்டும் வலியுறுத்திக் கூறிவிட்டு வருகிற பறுவம் அன்று அம்மாளாச்சிக்கு நேர்த்தி வைத்து பிள்ளையின் பெயரால் அபிஷேகம் செய்வோம்" என்று கூறிவிட்டு பெரியம்மா போய்விட்டா. அபிஷேகமும் செய்து ஒரு பானை பொங்கலும் பொங்குவதாக அம்மா நேர்த்தி வைத்தவ.

அந்த நேர்த்திக் கடனை இன்று செய்யப் போகின்றோம்.

"அன்னம்மா மகள் ஆழ்ந்த கற்பனையில் முழ்கிவிட்டுது" என்று கூறி என் கவனத்தைத் தன்பால் ஈர்த்தர் பெரியம்மா.

"இல்லை பெரியம்மா. நான் உங்கட நல்ல குணத்தைத்தான் நினைத்துப் பார்த்தனான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சரி. இப்ப வந்த அலுவல் என்ன? அம்மா என்ன சொல்லி விட்டவ"

"பொங்கலுக்குப் பாளை வாங்கிவரச் சொன்னவ"

"ஓகோ அன்னமயிலுக்குக் குழவி குத்தின நேர்த்தி போல"

"ஓம் பெரியம்மா"

"நான் உனக்கு எத்தனை தரம்

சொன்னனான் கண்டகண்ட சினேகிதங்கள் கூடாது என்று. அண்டைக்கு அந்தப் பெட்டையளிடம் சென்ட் வாங்கிப் பூசித்தானே இந்த வில்லங்கம் வந்தது.

"அண்டைக்குக் கண்டனி தானே அம்மா பட்டபாட்டை:

"சொல்லிப் போட்டன்.....,

அவள் என்ர பிள்ளை அவளின்ர கண்ணில இனிமேல் கண்ணீர் வாறதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்க மாட்டன்....... ஓ!"

சொல்லி முடிப்பதற்குள் பெரியம்மாவுக்குக் கண் கலங்கி கண்ணீர் வந்துவிட்டது.

அளவில்லாத அன்பும் அதன் காரணமாக எழுந்த கோவமும் கலந்த கலவையாகப் பெரியம்மாவின் முகம் காட்சி தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ பெரியம்மா: இனிமேல் நான் வலு கவனமாக இருப்பன்"

"சரி அதில பாளையிருக்கு. பூச்சிபுழு இருக்கும் கவனமாகப் பார்த்து நல்லதாக எடுத்துக்கொண்டு வாட குஞ்சு." என்று பெரியம்மா பாளை இருந்த இடத்தைக் காட்டிவிட்டா.

அன்றைக்கு நான் வேண்டாமென்று தான் சொன்னான். A/L படிக்கிற வசுமதி அக்காதான் கட்டாயமாக என் சட்டையில் செண்ட் பூசி விட்டவ. யாரோ வெளிநாட்டில் இருந்து கொண்டுவந்து கொடுத்ததை அவ பள்ளிக்கூடம் கொண்டு வந்து தானும் பூசி அவவின் பெஸ்ட் பிறன்ட் ராதிகா அக்காவிற்கும் கொடுத்தவ.

வெளிநாட்டு வாசம் உள்ளூர்க் குழவிகளுக்கு அலர்ஜி போலும்.

அதுதான் பள்ளிக்கூடம் விட்டுவரும் போது குழவிப்படை வந்து அவையளின் முகத்தை மூடியதுபோல் மொய்த்தன. நல்லவேளை எனக்கு ஒரு குழவிதான் குத்தியது. நான் ஒரே ஓட்டமாக அம்மாவிடம் ஓடி வந்து விட்டேன். அக்காமார் அந்த இடத்திலேயே மயங்கி விட்டார்கள். பல நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்துதான் அவர்களுக்குச் சுகம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியம்மா சொன்ன மாதிரியே கவனமாகப் பார்த்துப் பார்த்துப் பாளைகளை எடுத்தேன். அப்போது இரண்டு முயற்குட்டிகள் தென்னம் பாளைக் குவியலுக்குள் பதுங்கிக் கொண்டிருப்பது என் கண்களில் தெரிந்தது.

சின்ன முயற்குட்டிகள். நல்ல வடிவு.

பிடித்து வீட்டுக்குப் பொண்டு போனால் சாப்பாடு கொடுத்து வளர்க்கலாம் என்று எண்ணிக்கொண்டு நான் நிலத்தில் பதுங்கி இரண்டு குட்டிகளையும் பிடித்துக் கொண்டேன்.

பஞ்சுபோன்று முயற்குட்டிகளின் உடல் நைசாக இருந்தது. இரண்டு குட்டிகளையும் என்னிரு கன்னங்களோடும் அணைத்தேன். ஒரு முயல்குட்டியின் கால் நகம் என் தலையில் குழவி குத்தின இடத்தில் வருடியது.

சுள்ளென்று வலித்தது. எனக்கு

எனக்கு குழவி குத்தினதை அறிந்த அம்மா மண்ணில் விழுந்து புரண்டு அழுத காட்சி என் மனக்கண்முன் விரிந்தது.

"பிள்ளையாரே........"

இந்தக் குட்டிகளை நான் கொண்டு போனால் இவற்றின் தாய் வந்து எங்கட அம்மா அழுத மாதிரித் தானே அழும். அழுதழுது தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளைத் தேடும். அப்போது அதன் வலியும் வேதனையும் யாருக்குத் தெரியப் போகிறது?

வேண்டாம்.

மற்றச் சீவன்களின் கண்ணீருக்கு நாங்கள் காரணமாக இருக்க வேண்டாம். இயற்கையை நாங்கள் அழிக்கக் கூடாது. நாங்கள் இயற்கையை அழித்தால் இயற்கை எங்களை அழிக்கும். மனிதன் மனிதனாக வாழ்ந்து முயலை முயலாக வாழவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு முயற்குட்டிகளை இருந்த இடத்திலேயே விட்டுவிட்டேன்.

எங்கள் வீட்டிற்கு வந்ததும் பெரியம்மா வீட்டில் நடந்ததை ஒன்றும் விடாமல் அம்மாவிடம் சொன்னேன். அவற்றைக் கவனமாகக் கேட்ட அம்மா"ஆயிரம் கோயிலில் அபிஷேகம் செய்த பலன் எனக்குக் கிடைத்து விட்டுதடா நான் பெற்ற செல்லம்"

என்று கூறியவாறே என்னைத் தன் மார்போடு அணைத்து முத்தமிட்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின்
# பிள்ளை

“மணிமேகலை
அழுது கொண்டிருக்கிறா ரீச்சர்”

“ஏன்? ”

“புருசன்ர மாம்பழத்தைப்
பிச்சைக் காரப் பரதேசிக்குக் குடுத்த
காரைக்காலமையார் எண்டு
மேல் வகுப்பு அக்காக்கள்
பழிச்சுக் காட்டினம்
அதுக்குத் தான் அழுகிறா.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திலிங்கம் ரீச்சர் பாடு
பெரும் தர்ம சங்கடமானது.

ரீச்சர் பழக்கிய நாடகத்தில்
காரைக்காலம்மையாராக
நடித்த கண்ணம்மாவின் மகளை
தங்களுக்கு
வகுப்பெடுக்கிறவையைத் தவிர
வேறெவருமே
ஆசிரியர் இல்லையென்று
நம்பிக்கொண்டிருக்கிற சிலதுகள்
நெளிச்சுக் காட்டுதுகள்.

ஏனென்று கேட்கப் போனால்
அதுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீச்சரையே எதிர்த்து வாய் காட்டுங்கள்.
வேண்டாம்
தன்னைச் சுதாகரித்துக் கொண்ட
வைத்திலிங்கம் ரீச்சர்

உதுக்குப் போய் அழுகிறதே,
அவை பழிச்சுக் காட்டினா நீரும்
அவையளைப் பழிக்கிறது தானே.
என்று சமாளிக்க முயல

நான் அப்படிச் சொல்ல
மாட்டன் ரீச்சர்
ஏன்?

எங்கட அம்மா சொன்னவா
வயதுக்கு மூத்தவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் நோகக்
கதைக்கக் கூடாதென்று.

யேஸ்......,

பிள்ளைகளை வளர்த்தால்
கண்ணம்மாவைப் போல
வளர்க்க வேண்டும்

எங்கிருந்தாலும்
சுத்தப் பவுணில் எப்போதாவது
துருப்பிடித்திருக்குமா?

இல்லை!
இல்லை!
ஒருபோதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mother is first Teacher

Teacher is Second Mother

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org